# STOLEN ASSETS

## திருடப்பட்ட சொத்துக்களை நாம் எவ்வாறு மீட்டெடுக்கலாம்?

## இதற்கு எவ்வளவு காலம் செல்லும்?

## யார் நடவடிக்கை எடுக்க வேண்டும்?

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA

a nation that upholds integrity

# இலங்கையில் மறைத்து வைக்கப்பட்டுள்ள சொத்துக்களை மீட்டெடுத்தல்

இலங்கையில் குற்றவியல் வழக்கொன்று தீர்வை பெற / முடிவுறுத்தப்பட சுமார் 10.2 வருடங்கள் செல்கின்றன. ஆகவே இது நீண்டகாலச் செயல்முறையாகும்.

எவ்வாறாயினும், பொலீஸ், CID, சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் நிதி புலனாய்வு பிரிவு போன்ற சட்ட அமுலாக்க அதிகார சபைகளின் முறையான ஒருங்கிணைப்புடன் நாட்டில் தற்போதுள்ள குற்றவியல் சட்ட ஏற்பாடுகளின் கீழ் சொத்துக்களை அடையாளம் காணுதல், முடக்குதல் மற்றும் கைப்பற்றல் ஆகியவற்றை மேற்கொள்ள முடியும்.

திருடப்பட்ட பணத்தினை நாட்டிலிருந்து மிக விரைவாக நகர்த்த முடியும் என்பதால் சந்தேகத்திற்கிடமான நடவடிக்கைகள் தொடர்பில் சான்றுகள் கிடைக்கும் போது சட்ட அமுலாக்க அதிகார சபைகள் விரைந்து செயலாற்ற வேண்டியது அவசியமாகும். இதனை பொதுமக்கள் தமது அரசாங்கத்திடம் கோர வேண்டும்.

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity

# வெளிநாடுகளில் உள்ள சொத்துக்களை மீட்டெடுத்தல் (சர்வதேச சொத்து மீட்பு)

**ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் மாநாட்டில் (UNCAC) இலங்கையானது கையொப்பமிட்டு தனது ஆதரவினை உறுதி செய்துள்ளது.** UNCAC **இன் முக்கிய இரண்டு கொள்கைகளாக சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் சட்டவிரோத சொத்துக்களை மீட்டெடுத்தல் என்பன காணப்படுகின்றன.**

**"பரஸ்பர சட்ட உதவி (MLA)" ஊடாக சொத்துக்கள் திருடப்பட்ட நாட்டிற்கும் தற்போது அந்த சொத்துக்கள் நிலைகொண்டிருக்கும் நாட்டிற்கும் இடையே சர்வதேச ஒத்துழைப்பு மேற்கொள்ளப்படுகிறது.**

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity

# வெளிநாடுகளில் உள்ள சொத்துக்களை மீட்டெடுப்பதற்கான படிமுறைகள்

1. இலங்கையின் சட்ட அமுலாக்க அதிகார சபைகளுக்கும் திருடப்பட்ட சொத்துக்கள் நிலைகொண்டுள்ள நாட்டின் சட்ட அமுலாக்க அதிகார சபைகளுக்கும் இடையிலான முறைசாரா கலந்துரையாடல்கள்.
இடம்பெற்றதாக கூறப்படும் ஊழல் தொடர்பான ஆதாரங்களை கண்டறிய இக்கலந்துரையாடலைகள் மேற்கொள்ளப்படுகிறது. இது சொத்து தடமறிதல் எனப்படும்.

2. எமது நாட்டு அரசாங்கத்தினூடாக சொத்துக்கள் நிலைகொண்டுள்ள அரசாங்கத்திற்கு அதிகாரப்பூர்வமான கோரிக்கை ஒன்றினை முன்வைத்தல்.

3. கேள்விக்கு உட்படுத்தப்பட்ட சொத்து மீதான விசாரணை தொடர்பாக அந்த சொத்து நிலைகொண்டுள்ள நாட்டின் நீதிமன்ற உத்தரவைப் பெறல்.

4. சொத்துக்களை பூர்வீக நாட்டிற்கு திருப்பி அனுப்புதல்
(உ+ம் இலங்கைக்கு)

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity

வெளிநாடுகளில் உள்ள சொத்துக்களை மீட்டெடுத்தல் (சர்வதேச சொத்து மீட்பு)

# சர்வதேச சொத்து மீட்புக்கள் நிறைவு பெற

# சுமார் 10 வருடங்கள் செல்கின்றன.

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity

# உடனடியாகப் பயன்படுத்தக்கூடிய இலங்கையின் சட்ட ஏற்பாடுகள் யாது?

உள்நாட்டு மட்டத்தில் சில சூழ்நிலைகளின் அடிப்படையில் சொத்துக்களை பறிமுதல் செய்தல், முடக்குதல் மற்றும் கைப்பற்றுதல் போன்றன நாட்டின் பல சட்ட பிரிவுகளினால் மேற்கொள்ளப்படுகிறது.

- 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டம்
- 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டம் (வங்கிகளுடன் தொடர்புடையது)
- குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டம்
- 1870 ஆம் ஆண்டின் சுங்க கட்டளைச் சட்டம்
- 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க பணதூய்தாக்கல் தடைச் சட்டம்
- 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவை

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity

# இலங்கையில் கிடையாது...

- நாட்டுக்கு வெளியே உள்ள எமது நாட்டின் திருடப்பட்ட சொத்துக்கள் மீட்டெடுக்க ஓர் விரிவான சட்டம்

- உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் மீட்டெடுக்கப்பட்ட சொத்துக்களை முகாமைத்துவம் செய்வதற்கான ஒரு பொறிமுறை. குறித்த சொத்துக்கள் மீண்டும் இழக்கப்படாமலும் அவை சரியாக பராமரிக்கப்படுவதை உறுதி செய்வதற்கும் இது மிக முக்கியம்.

- சொத்துக்களை மீள ஒப்படைப்பதற்கும் அதன் உண்மையான உரிமையாளருக்கு பெற்றுக் கொடுப்பதற்குமான ஓர் பொறிமுறை (பாதிக்கப்பட்டவரின் இழப்பீடு)

என்பன இலங்கையில் கிடையாது...

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity

# தீர்வுகள்

இந்த இடைவெளிகளை பூர்த்தி செய்ய சட்ட கட்டமைப்புக்கான வரைவுவானது ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளது. இச் சட்டம் அமுலுக்கு வந்தால் பின்வரும் விடயங்களுக்கு தீர்வுகள் கிடைக்கும்,

- குற்றச் செயல்களினால் பெறப்பட்டவை தொடர்பிலான விசாரணைகள்
- குற்றச் செயல்களினால் பெறப்பட்டவை தொடர்பில் அடையாளம் காணுதல் மற்றும் அது தொடர்பில் தடமறிதல்
- குற்றச் செயல்களினால் பெறப்பட்டவைகளை பறிமுதல் செய்தல், முடக்குதல், கைப்பற்றுதல் மற்றும் அத்தகைய பெறுவனவுகள் தொடர்பில் சட்ட நடவடிக்கைகளைத் ஆரம்பித்தல்
- மீட்கப்பட்ட சொத்துக்களை அப்புறப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல்
- சொத்துக்களை மீட்டெடுக்கும் செயற்பாட்டினை மிக திறமையாக செயற்படுத்த சட்ட அமுலாக்க அதிகார சபைகளுக்கு கூடிய அதிகாரங்களை வழங்குதல்
- குற்றத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குதல் மற்றும் குற்றம் புரியாத மூன்றாம் தரப்பினர்களின் உரிமைகளை அங்கீகரித்தல்
- அவ்வப்போது பொது அறிக்கையிடல் மற்றும் பாராளுமன்ற அறிக்கையிடலை மேற்கொள்ளல்

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity

# வெற்றிகரமான சம்பவங்கள்

- பிலிப்பைன்ஸ் நாட்டின் ஜனாதிபதியான பேர்டினாண்ட் மார்கோஸ் என்பவரினால் திருடப்பட்ட சொத்துக்களில் 1 பில்லியனுக்கும் மேற்பட்ட அமெரிக்கா டொலர்களை கடந்த 21 வருட காலப்பகுதிக்குள் பிலிப்பைன்ஸ் மீட்டெடுத்துள்ளது. அவற்றில் பெருமளவு சுவிட்சர்லாந்து நாட்டிலிருந்து பெறப்பட்டவையாகும்.

- பெரு நாட்டைச் சேர்ந்த விளடிமிரோ மொன்டசினோஸ் என்பவரால் திருடப்பட்ட 174 மில்லியனுக்கும் மேற்பட்ட அமெரிக்கா டொலர்களை சுவிட்சர்லாந்து, கேமன் தீவுகள் மற்றும் ஐக்கிய அமெரிக்கா நாடுகளின் அதிகார எல்லைகளிலிருந்து 2007 ஆம் ஆண்டு பெரு நாடு மீட்டெடுத்தது.

- நைஜீரியா நாட்டின் இராணுவ தளபதியான சானி அபாச்சா என்பவரால் திருடப்பட்ட 700 மில்லியன் அமெரிக்கா டொலர்கள் சுவிஸ் நாட்டின் அதிகார சபைகளினால் முடக்கப்பட்டு பறிமுதல் செய்து மீண்டும் நைஜீரியா நாட்டுக்கே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

- நைஜீரியா நாட்டின் எண்ணெய் வளமிக்க பயல்சா மாநிலத்தின் ஆளுநரான டியபிரேய அல்மியேசேகா என்பவரால் சட்டவிரோதமான 17.7 மில்லியன் அமெரிக்கா டொலர்களை ஐக்கிய இராஜ்ஜியம் மற்றும் தென்னாபிரிக்க அதிகார சபைகளின் உதவியுடன் மீட்டப்பட்டு நைஜீரியா நாட்டுக்கு மீண்டும் வழங்கப்பட்டன.

- உஸ்பெகிஸ்தான் நாட்டின் முன்னாள் ஜனாதிபதியின் மகளான குல்னாரா கரிமவாக்கு கீழ் காணப்பட்ட 131 மில்லியன் அமெரிக்கா டொலர்கள் பெறுமதியான சொத்துக்களை உஸ்பெகிஸ்தான் நாட்டுக்கு மீள பெற்றுக்கொள்ளும் வகையில் 2020 ஆம் ஆண்டில், சுவிட்சர்லாந்து மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கிடையே விதிமுறைகள் உருவாக்கப்பட்டது.

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity

ஆதாரம்: UNCAC கூட்டணி மற்றும் OCCRP

# திருடப்பட்ட சொத்து மீட்பு முன்னெடுப்பு (StAR) என்றால் என்ன?

**StAR** என்பது உலக வங்கி மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் போதைப்பொருள் மற்றும் குற்றச்செயல்கள் பற்றிய அலுவலகத்தின் கூட்டு முயற்சியாகும். திருடப்பட்ட சொத்துக்களை மீட்க விரும்பும் நாடுகளுக்கும் திருடப்பட்ட சொத்துக்களாக நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட சொத்துக்கள் தமது நாட்டிலிருந்து மீண்டும் உரிய நாடுகளுக்கு வழங்க விரும்பும் நாடுகளுக்கும் தேவையான உதவி மற்றும் நிபுணத்துவ அறிவினை பகிர்தல் என்பன இதன் முக்கிய பணிகளாகும்.

**StAR** ஆனது ஊழல் செயற்பாடுகளினால் பெறப்படும் பணமானது மறைக்கப்படுவதை தடுப்பதத்திற்கான சர்வதேச முயற்சிகளுக்கும் ஆதரவளிக்கிறது.

**StAR** யானது ஒரு நாட்டில் தனது செயற்பாட்டினை மேற்கொள்ள வேண்டுமாயின் குறித்த நாடு **StAR** விடம் உதவுமாறு கோர வேண்டும்.

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity

# சொத்து மீட்பு பற்றிய உலகளாவிய மன்று (GFAR) என்றால் என்ன?

2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் உலக வங்கி ஐக்கிய நாடுகள் சபையின் போதைப்பொருள் மற்றும் குற்றச்செயல்கள் பற்றிய அலுவலகத்துடன் (UNODC) ஐக்கிய இராஜ்ஜியம் மற்றும் அமெரிக்கா இணைந்து சர்வதேச சொத்து மீட்டெடுப்பு எனும் தொனிப்பொருளில் ஓர் மாநாட்டினை நடத்தியது. நைஜீரியா, இலங்கை, துனிசியா மற்றும் உக்ரைன் ஆகிய நாடுகளின் சட்ட அமுலாக்க அதிகார சபைகளுடனும் திருடப்பட்ட சொத்துக்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ள நாடுகளின் அதிகார சபைகளுடனுமான சந்திப்பாக காணப்பட்டது.

தற்பொழுது இடம்பெற்று வரும் சொத்து மீட்பு வழக்குகளில் ஒருங்கிணைப்பை எளிதாக்குவதே இதன் நோக்கமாகும்.

மாநாட்டின் முடிவில், இலங்கையில் நிலுவையிலுள்ள 43 வழக்குகள் தொடர்பில் விவாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. குறித்த வழக்குகள் தொடர்பிலான பதிவுகள் எதுவும் பொதுவில் கிடைக்கவில்லை.

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity